விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 4 ஜ; ஆகிர் பிறை 30. இதழ்: 266
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-1-1991


## 15,000 மாணவர் பங்குபற்றிய மாபெரும் சைக்கிள் பேரணி

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மாணவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைக் கண்டித்து, யாழ் மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் எழுச்சிப் பேரணி நேற்றுக் காலை 9-00 மணிக்கு கன்னுகம் சந்தை மைதானத்தில் இருந்து ஆரம்பமானது.

15,000க்கும் மேற்பட்ட வலிகாமம் பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவிகள் மேற்படி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இந்தச் சைக்கிள் பேரணி கன்னுகத்தில் இருந்து ஆரம்பமாகி தாவடிச் சந்தி ஊடாக கோண்டாவிலுக்குச் சென்று விடுதலைப் புலிகள் மாதிரிச் செயலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்தது. அதன்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் கையளித்த 7 அம்ச கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியம் இலங்கை ஜனாதிபதிக்கு ஏழு அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர்

(4-ம் பக்கம் பார்க்க)

★ புலிகளுக்கு எதிராக

# மீண்டும் போரை தொடருமாறு படைகளுக்கு கடும் நிர்ப்பந்தம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதலை நடாத்துமாறு படையினர் மேலிடத்தால் கடுமையாக நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக இராணுவம் வெளியிட்ட துண்டுப்பிரசுரம் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ். குடாவின் பலபகுதியிலும் நேற்று 'ஹெலி'யிலிருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களில், புலிகளுக்கு எதிராக இராணுவத்தின் சகல பலத்தையும் முழுமையாக பிரயோகிக்குமாறு தாம் கடுமையாக நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரே யுத்தத்தைத் தொடர அடம்பிடிப்பதாக அரசு கூறிவந்ததை துண்டுப்பிரசுரம் இராணுவத்தின் இந்தத் படுத்தியுள்ளது; தெளிவு (சி)

## பலாலி முல்லைத்தீவில் நேற்று கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி, முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுக் கடும் மோதல் நடைபெற்றதாகத்

[4-ம் பக்கம் பார்க்க]

## வளைகுடா போர்க் கோலம் யுத்தம் வெடிக்கும் சாத்தியம்

(பாக்தாத்)
பாரசீக வளைகுடாவில் எந்நேரமும் போர் வெடிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதால் அரபு நாடுகளும், பல்நாட்டுப் படைகளும் முழுத் தயார் நிலையில் நிற்கின்றன. உத்தரவு கிடைத்தால் மிஞ்சுபவர்கள் யாரென்பது எல்லாம் முடிவடைந்த பின்பே தெரியும் ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது.

குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறவேண்டிய காலக்கெடு முடிவடைந்து பல மணி நேரமாகியும் அதிபர்

(4-ம் பக்கம் பார்க்க)

### இராணுவம் தேடுதல் 5 தமிழர் கைது

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு செட்டிப் பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத்தினர் 5 தமிழர்களைக் கைதுசெய்து முகாமுக்குக்

(4-ம் பக்கம் பார்க்க)

### 'தமிழோசை' தலைவர் மகாதேவா

[லண்டன்]
தமிழோசை சங்கர் ஓய்வு பெறுவதால் தமிழோசைத் தலைவராக இந்தியரான கே. மகாதேவா நியமனம் பெற்றுள்ளார்.

தமிழோசை நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமையும் நீடிக்கப்பட்டுள்ளதை தமிழோசை இப்படி அறிவித்துள்ளது. ''சண்டை என்று வந்தால் சண்டேயும் ஒலிபரப்புண்டு'' [எஸ்]

## போர் வேண்டாம்! பல நாடுகளில் ஊர்வலம்

(லண்டன்)
வளைகுடாவில் யுத்தத்தைத் தவிர்த்து, சமாதான முயற்சியைத் தொடருமாறு கோரி உலகின் பல நாடுகளிலும் பெரும் ஊர்வலங்கள் இடம் பெற்றுவருகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் வந்த மண்ணெண்ணை பதுக்கல்

(யாணப்பாணம்)
வடபகுதிக்கு ஏழு லொறிகளில் மண்ணெண்ணை வந்திருந்திருந்தும் இவற்றை வர்த்தகர்கள் விற்பனை செய்யாமல் பதுக்கிவருவதாகத் தெரிய வருகிறது.

உணவுப் பொருள்களும் தாராளமாக வந்துள்ளன. அப்பியாசக்கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள், கி.ஆர்; றூள் பேப்பர்களும் போதியளவு யாழ்ப்பாணம் வந்துள்ளன; [எஸ்]

## இயக்கச்சியில் விமானதாக்கு ஆனையிறவில் 'ஹெலி' சூடு

[யாழ்ப்பாணம்]
இயக்கச்சிப் பகுதியில் நேற்றுக் காலை பேரர் விமானங்கள் மேற்கொண்ட பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலில் சங்கத்

(4-ம் பக்கம் பார்க்க)

## தினமும் 10 லொறிகள் வடபகுதி வர அனுமதி

[பூநகரி]
கொழும்பிலிருந்து வட மாகாணத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றிவந்த 250 லொறிகளில் 13-ம் திகதி தொடக்கம் 16-ம் திகதிவரை 55 லொறிகள் வவுனியா தடைமுகாமில் இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஒரு நாளைக்கு 10 அல்லது 11 லொறிகள் மட்டுமே இராணுவத்தால் அனுமதிக்கப்படுகிறது.

பூநகரியூடாக யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருள்கள் உரவகைகள், மண்ணெண்ணை என்பன வந்து சேர்ந்தவண்ணம் உள்ளன. (23)

## கிழக்கில் 5000 இராணுவம் பெரும் தாக்குதல் முஸ்தீபு

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக 5000.க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பெரும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் நேற்று முதல் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக கொழும்பில் இராணுவ தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இராணுவத்திற்கு உதவியாக விமானப்படையினரும், கடற்படையினரும் ஈடுபட்டு வருகின்றனராம். (கி)

## வரி விளம்பரம்

### கல்வி

கணிதம் O/L ஏப்ரல், டிசம்பர் பரீட்சைகளில் விசேட சித்தி, அதி விசேட சித்தி பெறுவதற்கு பரீட்சை தாள்கள் சென்ற 15வருடங்களாகத் திருத்திய பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்; 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (சி-4269)

## கிழக்கு அகதிகளுக்கு உதவி

(மாங்குளம்)

கிழக்குமாகாண அகதிகளுக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய சென். ஜோன் அம்புலன்ஸ் பிரிவு மாணவர்கள் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் அண்மையில் வழங்கியுள்ளனர். [150]

## நல்லூரில் காகித உற்பத்தி

(நல்லூர்)

பொங்கல் தினத்தன்று நல்லூரில் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பழைய பத்திரிகைத்தாள்களிலும் சல்வீனியா வேரிலிருந்தும் தயாரிக்கப்பட்ட பத்திரிகைத்தாள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (152)

# வளைகுடா நெருக்கடி: இலங்கையை பாதித்துள்ளது!

வளைகுடா நெருக்கடி உலகைப் பெரும் விசனத்தில் ஆழ்த்தியுள்ளது. அரபுநாடுகளில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்யும் ஆசிய நாடுகள் அனைத்தையும் இப்பிரச்சனை பெரும் பாதிப்பை ஏற்படுத்த தொடங்கியுள்ளது. அரபு நாடுகளுடன் வர்த்தக பொருளாதரா உறவுகளை பேணிய நாடுகளும் கடுமையாக பாதிப்படைந்துள்ளன. இலங்கை தனது தேயிலை ஏற்றுமதியில் இருபது சத வீதமானவற்றை ஈராக்கிற்கே விற்பனை செய்து வந்தது. குவைத்தில் மட்டும் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தனர். அவர்கள் எல்லோரும் வெறும்கையுடன் நாடு திரும்பியுள்ளனர். இதனால் இலங்கை மாதாந்தம் 500 மில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது. எல்லா நாடுகளும் ஈராக் குவைத்மீது ஆக்கிரமிப்பு செய்திருப்பதை கண்டித்திருந்தபோதிலும் ஈராக்கிற்கு எதிரான ஐ. நா. தடைகளை அங்கீகரித்தபோதும் இதிலிருந்து எழும் பிரச்சனைகள் குறித்து அணுகுமுறைகள் வேறாகவே இருக்கின்றன. ஆனால் வளைகுடா நெருக்கடி மோசமடைவதை ஆசிய நாடுகள் எதுவும் விரும்பவில்லை.

ஈராக்கின் ஆக்கிரமிப்பை கண்டித்த உலகசமாதான கவுன்சில் உபதலைவர் அலி அக்ஹராட் "ஐ. நா. தடைகளை அமுல்படுத்துவது என்ற பாவனைகீழ் அமெரிக்கா எடுக்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் நிலைமையை உக்கிரப்படுத்துவதுடன் குருட்டுப்பாதையிலும் இராணுவ மோதல் பாதையிலும் இட்டுச்செல்லும் என கூறியுள்ளார். தமக்கு அரசியல் பொருளாதார அனுகூலங்களைப் பெறலாமென சில ஆசியநாடுகள்

### ஸச்சி

தமது துருப்புக்களை வளைகுடாவிற்கு அனுப்பிவைத்துள்ளன.

இன்றைய நெருக்கடிக்கு ஐ. நா. வின் வழிநடத்தலின் கீழ் பாரியளவிலான சர்வதேச நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மட்டுமே சவூதிஅரேபியாவிலும் அரபு எமிரேட்டிலும் அந்நிய துருப்புக்கள் குவித்து வைத்திருப்பவரால் ஏற்பட்டிருக்கும் யுத்த அபாயத்தை அகற்ற முடியுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இன்றைய நிலையால் எண்ணெய் விலை அதிகரிப்பு, தென் கொரிய பொருளாதாரத்தைக்கூட அதிரவைத்துள்ளது, எல்லா நாடுகளிலும் எண்ணெய் இறக்குமதிக்கு தேவையான அந்நிய செலாவணி இன்மையால் நிலைமை படுமோசமாகியுள்ளது.

பிலிப்பைன்ஸ் நிதியமைச்சர் ஜேசஸ் ரனில்லோ கூற்றுப்படி: தனது நாட்டில் பூகம்பத்தால் ஏற்படும் பேரழிவுகளின் பார்க்க கூடுதல் அழிவுகரமான தாக்கம் வளைகுடா பிரச்னை தனது நாட்டில் ஏற்படுத்தவுள்ளதாககூறியுள்ளார்.

இன்றைய அபாயகரமான நிலையில் ஈராக் தலைமை உசிதமான முடிவை எடுக்கும் என்றும் நெருக்கடிகளை தீர்த்து வைக்குமென சகல ஆசிய நாடுகளும் எதிர்பார்க்கின்றன. போரா சமாதானமா என்பது காலம்தான் பதில்சொல்லவேண்டும் இந்நிலையில் இலங்கையின் நிலை பரிதாபத்துக்குரிய தாகவுள்ளது. உள்நாட்டுப் போரினால் மோசமடைந்துள்ள இலங்கையில் மோசமாகிவரும் பொருளாதாரநிலை. தொழில் விவசாய தொழில் மற்றும் பணவீக்கம், பாரிய பட்ஜட் பற்றுக்குறைமற்றும்போன்றவடிவங்களுக்கு முகம் கொடுக்கும் நிலை வளைகுடா நெருக்கடியால்உருவாகியுள்ளது,

## இராசி பலன்

**17-01-1991**
**வியாழக்கிழமை**

பிரதமை காலை 7.24 வரை: திருவோணம் நள்ளிரவு 11.57 வரை. சித்தயோகம், ராகு காலம் பகல் 2.05 முதல் 3.35 வரை. நல்லநேரம் காலை 8.05 முதல் 9.35 வரை;

மேடம்; பொருள் வரவு, தொழில் துறை பாராட்டு, குடும்பச் சிறப்பு, பயணங்களால் அனுகூலம்;

இடபம்: மறைமுக எதிர்ப்பு, தொழில் பாதிப்பு, குடும்பத்தில் கருத்துவேறுபாடு, தெய்வீகச் செலவு, அகால போஜனம்.

மிதுனம்: எதிர்பாராத சிக்கல், தொழில் நஷ்டம், குடும்பக் கவலை, காரியத் தடை, அலைச்சல் மிகுதி;

கடகம்: தாய்வழி உதவி, கடன்வரவு, தொழில் லாபம், காரிய வெற்றி, பொதுப் பணி, பாராட்டு.

சிங்கம்: எதிர்பாராதஉறவு, விருந்துபசாரம். தொழில் நன்மை, அதிகாரிகள் பாராட்டு, உல்லாசப் பயணம்.

கன்னி; கடிதத் தொல்லை, அவமதிப்பு, அனாவசியச் செலவு, தொழில் பாதிப்பு, கருத்துமோதல்.

துலாம்: வேண்டாத உறவு, சளித்தொல்லை, வைத்தியச் செலவு, அலைச்சல், தொழில் மாற்றம்.

விருச்சிகம்: புதிய சிந்தனை. பெரியோர் ஆசி. பயணம், விருந்தினர் வருகை. குடும்ப மகிழ்ச்சி.

தனுசு: மனப்போராட்டம், தாராள சிந்தை, குடும்ப முரண்பாடு, மாமனார் தொல்லை. பகை:

மகரம்: தொழில் லாபம், வீட்டில் சுபகாரியம், ஆலய

(3-ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் மீண்டும் மார்புநோய்சிகிச்சைநிலையம்

(யாழ்ப்பாணம்)

மார்புநோய் சிகிச்சை நிலையம் தற்போது பருத்தித்துறை வீதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் இயங்கி வருகிறது.

முன்பு சிகிச்சை நிலையம் கோப்பாயில் இயங்கி வந்தது.

மேற்படி சிகிச்சை நிலையத்தின் வைத்திய பொறுப்பதிகாரி கடந்த மாதம் மாற்றலாகி கொழும்புக்கு சென்றுள்ளார். இவரின் வெற்றிடம் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கிறது. இங்கு இருந்த பதிவுபெற்ற வைத்தியரும் கொழும்புசென்றுள்ளார். (153)

## விலைகள் வீழ்ச்சி

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் மண்ணெண்ணெய் சீனி, மற்றும் பொருள்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன.

பூநகரியில் பொருட்கள் கொண்டுவந்த லொறிகள் தரித்து நிற்கிறபடியால் பல பொருட்களின் விலைகள் மேலும் வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (152)

# தபாற் கட்டளைகள் வழங்கப்படமாட்டாது

(மாங்குளம்)

தபாலகங்களில் வழங்கப்பட்டுவந்த தபாற் கட்டளை (போஸ்ரல் ஓடர்), புது வருடத்திலிருந்து வழங்கப்படமாட்டாதெனத் தபால் தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வரை வழங்கப்பட்டுவந்த தபாற் கட்டளைகள், எதிர் வரும் யூன் மாதம் வரை தபாலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்; காசுக் கட்டளை (மணி ஓடர்), தபாலகங்களில் ரூபா 1,000 வரையிலான பெறுமதிக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

உப தபாலகங்கள், ஏஜென்சி தபாலகங்களில் ரூபா 600 வரையிலான மணி ஓடரைப் பெறலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (150)

## தென் தமிழீழ மக்களுக்கு உதவி

(கொழும்புத்துறை)

தென் தமிழீழத்தில் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட அகதி மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக சுதுமலை - தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தினர் உடுபுடைவைகள், உலர் உணவுப் பொருள்கள், அலுமினியப் பாத்திரங்கள் ரொக்கப்பணம் ஆகியவற்றைச் சேகரித்து மானிப்பாய் வட்டச் செயலகத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# நஷ்டஈடு வழங்க துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்ட ஈடு வழங்கும் பணியில் யாழ். செயலகப் புனர்வாழ்வுப் புனரமைப்புப் பகுதியினர் துரிதமாக ஈடுபட்டுவருகின்றனர்.

பாதிக்கப்பட்டோரில் 533 பேருக்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரமளவில் உரிய வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## மனையியல், தையல், கைப்பணி பயிற்சி வகுப்புகள் நடாத்த ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் சங்கப் பரப்பு எல்லைகளாகிய மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், கல்வளை, மானிப்பாய் ஆகிய கிராமங்கள் தோறும் மகளிர் முன்னணி அமைக்கப்பட்டுள்ளது, மகளிருக்கான விவசாயப் பயிற்சி வகுப்புகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேலும், தையல் பயிற்சி மனையியல் பயிற்சி, கைப்பணிப் பயிற்சி வகுப்புக்களை நடாத்த சங்க பொது முகாமையாளர் திரு. யே. குணரத்தினம் மற்றும் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. சி. கோ. ஜீவரட்ணம் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழுக்களின் தலைமைச் செயலகமாக மேற்படி சங்கம் செயல்படும்.

## பஸ்விபத்து 35பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் வீதி ஒன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பஸ்விபத்தில் 35 பேர் பலியானார்கள்.

பஸ்சாரதியின் கவனக்குறைவினாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## பதட்ட நிலையில் உலக மக்கள்!

2-வது உலக யுத்தத்திற்கு பின்னர், உலகின் அதிநவீன நாசகார ஆயுதங்களின் அட்டகாசங்கள் அரங்கேறவுள்ள வளைகுடாவில் காலக்கெடு முடிந்தும் யுத்தத்தை யார் முதலில் தொடங்குவது என்பதிலான இழுபறி நீடித்துக் கொண்டே செல்கின்றது!

“அல்லாஹு அக்பர்” என்ற கோஷம் எழுப்பி தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் சாகும் வரையான யுத்தத்துக்கு இறுதிவரை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் சங்கநாதம் ஊதியபடியே இருந்தார்.

ஐ. நா. சபை செயலர் பாதுகாப்புச்சபை நாடுகள் வளைகுடாவை அடுத்துள்ள அனைத்து நாடுகளும் கடைசி நேரத்திலாவது ஈராக்கிய படைகளை குவைத்திலிருந்து வெளியேற்றுமாறு விடுக்கப்பட்ட அனைத்து வேண்டுகோள்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன.

ஐ. நா. தீர்மானத்துக்கு ஆதரவான மேற்கு வல்லரசு நாடுகளின் ஆறு லட்சத்து 50 ஆயிரப் படையினர் யுத்த சன்னத்தராக, குவைத் நாட்டை நோக்கி தாக்குதல்களை தொடக்க அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் முடிவை காத்துக்கிடக்கின்றன!

அதிநவீன ஆயிரக்கணக்கான யுத்த விமானங்கள், நாசகாரி கப்பல்கள், டாங்கிகள், ஏவுகணைகள் அனைத்தும் தமது முஷ்டியை முறுக்கி, எந்த நிமிடமும் தாக்குதல்களை ஆரம்பிக்கும் பதட்ட நிலையில் பயிற்சிகள் வேறு நடாத்திக் கொண்டிருக்கின்றன.

இதேவேளையில் லண்டன், பரிஷ், பொன், ரோம் உட்பட பலநாடுகளில் எப்பாடுபட்டாவது யுத்தம் மூளாமல் தடுத்துவிட வேண்டும் என்று ஆயிரக்கணக்கான மக்கள் சமாதான ஆர்ப்பாட்டங்கள் நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

1969ம் ஆண்டு சந்திர மண்டலத்துக்கு முதல் மனிதன் இறங்கிய வேளையிலும், 1962-ம் ஆண்டு கியூபா நெருக்கடியின்போதும், உலகம் முழுவதும் உள்ள மக்கள் அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகின்றது: என்ற அறியும் ஆவலிலும், அச்சத்திலும், அங்கலாய்ப்பிலும், வானொலி, தொலைக் காட்சிபெட்டிகளின்முன்னர் தவம் கிடந்தனர்!

அமெரிக்க முதலாளித்துவத்துக்கு நித்த தலையிடி கொடுத்துவந்த கம்யூனிஸ கியூபா நாட்டுக்கு உதவ ரஷ்ய நாசகாரிக் கப்பல்கள் அணிஅணியாக அமெரிக்க கடற்பிராந்திய எல்லையை உடைத்து கியூபாவுக்குச் செல்ல முற்பட்டவேளையில் அவற்றை ஏவுகணைகளால் தாக்கி அழித்தொழித்துவிடும்படி அன்றைய ஜனாதிபதி ஜோன்-எவ் கென்னடி கடும் உத்தரவு இட்டிருந்தார்.

இதனால் எந்தநிமிடமும், மூன்றாவது உலகப் போர் வெடித்துவிடுமோ என்று உலக நாடுகள் அஞ்சிக் கலங்கி நின்ற வேளையில் கடைசி நிமிடத்தில், ரஷ்ய தலைவர் குருஷேவ், மனம்மாறி நாசகாரிகளை பின்வாங்கச் செய்தமையினால் யுத்த கெடுபிடி தடுக்கப்பட்டு உலகமே நிம்மதிப் பெருமூச்சு விட்டது!

இதேபோல, இக்கெடுபிடி யுத்தம் மூண்டுவிடுமா அல்லது தணிந்துவிடுமா என்பது இதுவரையில் கேள்விக் குறியாகவே உள்ளது!

## காகிதாதிகள் எடுத்துவர கூட்டுப்படை அனுமதி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பி மற்றும் காகிததாதி வகைகளை வடபகுதிக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி அளித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பாடசாலை அப்பியாசக் கொப்பிகளை தயாரிக்கும் நிறுவனங்கள், விற்பனையாளர்கள் இதுசம்பந்தமாக மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு யாழ். செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள். (153)

## முருங்கன் விவசாயப் பண்ணையில் ஆராய்ச்சிவேலைகள்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் விவசாய பண்ணையில் ஆராய்ச்சி வேலைகள் இம்மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாய பயிர்கள் சம்பந்தமான பரீட்சார்த்த ஆராய்ச்சி வேலைகளே இங்கு தற்போது நடைபெறுகிறது.

முருங்கன் விவசாய பண்ணைக்கும் ஆராய்ச்சி நிலையத்திற்கும் சிறிலங்கா இராணுவ யுத்த நடவடிக்கை காரணமாக பதினாலு லட்சம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [153)

### இன்றைய பலன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தரிசனம், குடும்ப மகிழ்ச்சி, பண வரவு.

கும்பம்; போட்டி மனப்பான்மை, அந்நியர்தொல்லை, பணக் கஷ்டம், தொழில் போட்டி.

மீனம்: குடும்ப நன்மை, நரம்புப் பலவீனம், தொழில் நஷ்டம், விபரீத எண்ணம். கவலை மிகுதி.

‘ஜோஸ்யர்’

## பலதும் பத்தும்

### எட்டு எண்!!

முதலாவது உலகப்போரில் ஒருபோர் வீரனது வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது. போர்க்காலத்தில் எண்களைப் பற்றி ஞானம் உள்ளவர்கள் அதை தங்களுக்கு சாதகமாப்பயன்படுத்தி ஆபத்தில் இருந்து தப்பி இருக்கிறார்கள் என “ஹீரோ” குறிப்பிடுகிறார்.

முதலாவது உலகப்போரின் போது ஆங்கிலப் போர் வீரன் ஜேம்ஸ் பைலர் ஆபத்து நிறைந்த போர் முகாமுல் தன்னுடைய சகாக்களோடு இருந்தான். வேடிக்கையாக தன்னோடு இருந்தவர்களின் பிறந்த தேதியையும் கேட்டறிந்தான். எண் எட்டுக்குரியவர்களாக அவர்கள் இருப்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தான். ஏனெனில் அவன் ஜனவரி 26ந் திகதி பிறந்தவன். யோசித்துப் பார்த்ததில் அன்று ஜனவரி 17 அன்றைய தினமும் எண் எட்டுக்குரியதாக இருந்தது. அவன் இருந்த படைவரிசையையும் எண்ணினான், அதுவும் எட்டாக இருந்தது. அபாயம் என்பதை நிச்சயமாக அறிந்து கொண்டான்.

எதிர்வரிசையில் ஜேர்மன் பீரங்கி வெடிக்கத் தொடங்கியது. ஒவ்வொரு குண்டாக வெடிப்பதையும் அவை நெருங்கி வருவதையும் ஏழு குண்டுகள் வெடித்துவிட்டதையும் அறிந்து ஏதோ உணர்ச்சியால் உந்தப்பட்டு உயிரைப்பொருட்படுத்தாமல் மைதானத்தை நோக்கி ஓடினான், எட்டாவது குண்டு அவனது படைநிலைமீது விழுந்ததில் அனைத்து வீரர்களும் மடிந்தனர்; ஆனால் சாதுரியமான தலைவன் தப்பினான் என குறிப்பிடப்பட்டுள்ளது.

‘ஞானி’

# வளைகுடா போர்க் கோலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹுசைன் தமது முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை எனக் கூறி வருவதும், ஐ. நா. செயலர் கடைசி முயற்சியைக் கைவிடாது ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐ.நா. விதித்த ஜனவரி 15 என்ற காலக் கெடு குவைத்தைவிட்டு ஈராக் வெளியேறுவதற்கான காலக் கெடுவே தவிர ஐ. நா.வின் நடவடிக்கைக்கான காலக் கெடு அல்லவென்று அமெரிக்க அரசு நேற்றிரவு அறிவித்திருப்பது யுத்தம் உடனடியாக மூளும் சாத்தியமில்லை எனத் தெரிவிப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

எனினும் உலகம் முழுவதினதும் பார்வை வளைகுடாவின் பக்கம் திருப்பப்பட்டுள்ளதும், அமெரிக்காவும் ஈராக்கும் பலப்பரீட்சையை மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## இயக்கச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாளையைச் சேர்ந்த மதி என்ற சிறுமி படுகாயமடைந்தார்.

இதேவேளையில் ஆனையிறவுப் பகுதியில் ஹெலி ஒன்று நேற்றுக்காலை கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் ஆனையிறவு முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல் பல மணி நேரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. [வி-க]

## மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

அந்த ஏழு அம்சக் கோரிக்கைகளாவன;

தமிழீழ ஆசிரியர்களையும், மாணவர்களையும் சிங்களப் படை கைது செய்தலையும், கொலை செய்தலையும் நிறுத்த வேண்டும். பாடசாலைகள் மீதும், மற்றும் கல்வி நிலையங்கள் மீதும் கண்மூடித்தனமான குண்டுவீச்சினை நிறுத்த வேண்டும். சிங்களப்படைகள் முகாமிட்டுள்ள பாடசாலைகளிலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டும். குறிப்பாக தென் தமிழீழ மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கான சூழ்நிலையை உருவாக்கி, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்கள் ஒழுங்கான கல்வியைத் தொடர வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். மாணவர்களாகிய எமக்கு வேண்டிய பாடப்புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், ஏனைய பாடசாலை உபகரணங்களை விநியோகிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்குமான போக்குவரத்து வசதிக்கு தடைசெய்யப்பட்டுள்ள எரிபொருளை விநியோகிக்க வேண்டும்; யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலையை நிறுத்த வேண்டும்; [153]

## இராணுவம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு சென்றனர்.

இவர்களில் ஒரு வயோதிபர் மாத்திரம் கடும் சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்பட்டார். ஏனைய நால்வருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தெரியவில்லை.

இதே வேளையில் கிரான் பகுதியில் இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து கொள்ளைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வி-க]

## 15,000 மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பலாலி வீதி ஊடாகச் சென்று நல்லூரில் உள்ள கல்விப் பணிமனை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்திலும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

பின்னர் கோவில் வீதி ஊடாக நக்கா வீதிச் சந்தியில் உள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கச் செயற்குழு அலுவலகத்தை அடைந்து, அங்குள்ள பிரதிநிதியிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ். செயலகத்தை நோக்கி ஊர்வலம் சென்றது. யாழ். செயலகத்திலும் மகஜர் கையளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து செயலகம் முன்பாக மாணவர் ஒன்றியத்தின் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியச் செயலாளர் செல்வன் உமாகாந்தன், யாழ்.பல்கலைக்கழக மாணவி செல்வி ஜெயவதனி, யாழ். மாணவர் சார்பில் செல்வன் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றினார்கள்,

சைக்கிள் பேரணி ஏழு மைல் தூரத்திற்கு நடைபெற்றது. [153]

# யாழ். இந்து நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா இன்று 17-ந் திகதி ஆரம்பமாகி இம்மாதம் 20-ந் திகதி வரை கலாசார விழாவாக நடைபெறவிருக்கிறது.

நூற்றாண்டு விழாக்கட்டிடக் கால்கோள் நிகழ்வு இன்று நடைபெறவிருக்கிறது; மேலும் சிறப்புரைகளும், ஆசியுரைகளும். கலை நிகழ்ச்சிகளும் இன்று நடைபெறும்; [மா]

# விளையாட்டு வினையானது

[நல்லூர்]

யாழ். கோட்டையிலிருந்து விளையாட்டுக்காக சிறுவன் ஒருவன் பொறுக்கி எடுத்துவந்த வெடிக்காத துப்பாக்கி ரவை ஒன்றை நிலத்தில் வைத்து சுத்தியலால அடித்தபோது அது வெடித்து கண்ணில் பலத்த காயங்கள் ஏற்பட்டது.

தச்சன்தோப்பைச் சேர்ந்த பரமசாமி நிசாகரன் என்ற பதின் மூன்று வயதுச் சிறுவன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை இடம் பெற்றது. [152]

## போர் வேண்டாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான், அரபுநாடுகள் உட்படப் பல நாடுகளில் பல லட்சம் மக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் போரை நிறுத்தும் முயற்சியில் போப்பாண்டவரும் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது. இம் மோதலில் இரண்டு விடுதலைப் புலிகள் வீர மரணம் அடைந்தனர்.

பலாலியிலும், முல்லைத்தீவிலும் முகாம்களை விட்டு வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர், புலிகளின் நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்ட பின்பே இம்மோதல் இடம்பெற்றது;

முல்லைத்தீவில் இடம்பெற்ற மோதலில் சந்துரு (ம. யோகரத்தினம் விசுவமடு), உக்கிளாஸ் (ச. சந்திரன் பாரதிபுரம்) ஆகிய இருவரும் வீர மரணம் அடைந்தனர். (வி)

# மரண அறிவித்தல்

## சகோதரி சித்ரா சேவியர்

மானிப்பாயைச் சேர்ந்த இலங்கை பெந்தெகொஸ்தே சபை தேவ ஊழியராகிய சகோதரி சித்ரா 16-01-1991 புதன்கிழமை மகிமைக்குட் பிரவேசித்தார்; சுண்டுக்குளியில் நடைபெறவிருக்கும் அன்னாரது அடக்க ஆராதனை ஒழுங்குகள் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்: பாஸ்டர் தேவநாயகம்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டிவீதி,
சுண்டுக்குளி; (கி-4270)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.